25.09.2024
OS. No. 185/2023
**வா.சா.1 –** திரு.மோகன்ராஜ் த/பெ. திரு.வேலுச்சாமி

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)

**குறுக்கு விசாரணை :–**

நான் டென்டல் மெக்கானிக் படித்து இருக்கிறேன். நான் ஓமந்தூரார் அரசு மருத்துவமனையில் வேலை பார்க்கிறேன். அங்கு டென்டல் அசிஸ்டன்டாக வேலை பார்க்கிறேன். கடந்த 2011 ஆம் வருடத்தில் இருந்து அங்கு வேலை பார்த்து வருகிறேன். நான் ஒப்பந்த அடிப்படையில் அங்கு பணியாற்றுகிறேன். எனக்கு மாதம் ஒன்றுக்கு ரூபாய் 17,000 சம்பளம் வழங்குகிறார்கள். நான் தனியாக டென்டல் லேப் வைத்திருக்கிறேன். அங்கு செயற்கை பல் செட் செய்து கொடுப்பதன் மூலம் எனக்கு வருமானம் வருகிறது. அதன் மூலம் எனக்கு மாதம் 15,000 முதல் 20,000 வரை வருமானம் வருகிறது. இதைத் தவிர எனக்கு வேறு வருமானம் எதுவும் இல்லை. நான் தாக்கல் செய்த வழக்குரையில் எனக்கும் பிரதிவாதிக்கும் இடையில் பணம் கொடுக்கல் வாங்கல் ஏற்கனவே இருந்ததாக கூறி இருக்கிறேன். கடந்த 2019 ஆம் வருடத்தில் இருந்து அவ்வாறு எனக்கும் பிரதிவாதிக்கும் இடையில் கொடுக்கல் வாங்கல் இருந்து வந்தது. பிரதிவாதி என்னிடம் ஏற்கனவே 2019 ஆம் வருடம் ஜூன் மாதத்தில் ரூபாய் ஒரு லட்சம் கடன் வாங்கியிருந்தார். அந்த பணத்தை அசலும் வட்டியும் சேர்த்து அதே வருடத்தில் டிசம்பர் மாதத்தில் திருப்பி செலுத்தி விட்டார். நான் முதலில் கொடுத்த பணம் ரூபாய் ஒரு லட்சத்திற்கு ஆவணம் எதுவும் வாங்கவில்லை நம்பிக்கையின் அடிப்படையில் தான் அந்த பணத்தை முதலில் கொடுத்தேன். அதற்கு மாதம் ஒன்றுக்கு ரூபாய் 1000 வீதம் வட்டி சேர்த்து திருப்பிக் கொடுத்தார். இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு எனது வழக்கறிஞருக்கு நான் தான் விவரங்கள் சொன்னேன். நான் தாக்கல் செய்த சத்திய பிரமாண

வாக்குமூலத்திற்கும் நான் தான் என் வழக்கறிஞரிடம் தகவல் சொன்னேன். நான் தாக்கல் செய்த வழக்குரையில் என் அப்பா பெயர் குறிப்பிடவில்லை என்றால் அதை நான் கவனிக்கவில்லை. நான் தாக்கல் செய்த நிரூபண வாக்குமூலத்தில் என் தகப்பனார் பெயர் சொல்லி இருக்கிறேன் என்றால் சரிதான். நான் எனது வழக்கறிஞர் மூலம் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு பிரதிவாதிக்கு அனுப்பி அறிவிப்பில் மாம்பழச்சாலை முகவரியையும் பூதலூர் முகவரியையும் குறிப்பிட்டு இருந்தேன் என்றால் அது தவறுதலாக ஏற்பட்டது ஆகும். மாம்பழச்சாலை முகவரியை அதில் குறிப்பிட்டு இருக்கிறோம். அந்த அறிவிப்பை தஞ்சாவூரைச் சேர்ந்த வழக்கறிஞர் திருமதி சிவசங்கரி என்பவரை வைத்து அனுப்பி இருந்தேன் என்றால் சரிதான். பிரதிவாதி நான் வேலை பார்த்து வரும் அதே மருத்துவமனையில் எத்தனை வருட காலமாக வேலை பார்த்து வருகிறார் என்றால் எனக்கு முன்பிருந்தே அவர் அதே மருத்துவமனையில் பணியாற்றி வருகிறார். அவர் அந்த மருத்துவமனையில் நர்சாக வேலை பார்த்து வருகிறார். அந்த மருத்துவமனையில் பணியாற்றும் வேறு நபர்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரிந்த நபர்கள் நிறைய இருக்கிறார்கள். அங்கு வேலை பார்க்கும் அனைவரையும் எனக்கு பெரும்பாலும் தெரியும். 31.03.2018 அன்று பிரதிவாதியும் அவரது கணவரும் என்னிடம் வந்து கடன் கேட்டார்கள் என்றால் அது தவறான தகவல் ஆகும். 31.03.2018 அன்று பிரதிவாதியும் அவரது கணவரும் என்னிடம் கடன் கேட்டபோது நான் அவர்களை திருச்சி சிந்தாமணியில் உள்ள சுமங்கலி பைனான்ஸ் என்ற நிறுவனத்திற்கு அழைத்துச் சென்று ரூபாய் 1,50,000/- கடன் வாங்கிக் கொடுத்தேன் என்றால் தவறாகும். நான் அந்தக் கடனுக்காக தான் பிரதிவாதியிடம் இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள கடனுறுதி சீட்டில் கையொப்பம் வாங்கினேன் என்றால் தவறாகும். 2021 ஆம் ஆண்டு மே மாதம் எனது சொந்த பணம் ரூ.2,50,000/-

பிரதிவாதிக்கு கடனாக கொடுத்தேன் என்று கூறினால் அதுவும் தவறாகும். முதலில் கொடுத்த ரூ.1,50,000/- மற்றும் பிறகு கொடுத்த ரூ.2,50,000/- சேர்த்து மொத்தம் ரூ.4,00,000/-ற்கு மாதத்திற்கு ரூபாய் 16 ஆயிரம் பிரதிவாதி வட்டியாக செலுத்தி வந்தார் என்று கூறினால் தவறாகும். கடந்த 05.06.2021 முதல் 05.01.2023 வரை வட்டி செலுத்தி வந்தார் என்று கூறினால் தவறாகும். 10.12.2019 அன்று ரூ.50,000/-, 11.08.2020 அன்று ரூ.1,00,000/-, 08.11.2020 அன்று ரூ.1,00,000/- ஆக மொத்தம் ரூ.2,50,000/- எனது சொந்த பணத்தை பிரதிவாதிக்கு கடனாக கொடுத்தேன் என்று கூறினால் அது தவறாகும். நான் கொடுத்த ரூபாய் 2,50,000/-க்கு பிரதிவாதி 10% வட்டி செலுத்தி வந்தார் என்று கூறினால் தவறாகும். வட்டியோ அசலோ செலுத்தாமல் இருந்தால் அசல் இரண்டு மடங்கு ஆகிவிடும் என்றால் சரியல்ல. பிரதிவாதி அது தொடர்பாக கேட்டதற்கு பைனான்ஸ் விதி என்று கூறினேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி எதிர்வழக்குரையில் பத்தி 5 ல் கூறியவாறு ரூ.5,88,000/- என்னிடம் செலுத்தியிருக்கிறார் என்றால் தவறாகும். பிரதிவாதி என்னிடம் திருப்பி செலுத்திய அசல் மற்றும் வட்டிக்கு நான் எவ்வித ரசிதும் வழங்குவது கிடையாது என்றால் சரியல்ல. நான் பணம் ஒழுங்காக திருப்பிச் செலுத்த வில்லை என்றால் வட்டி சேர்த்து ரூபாய் 18 லட்சம் திருப்பி செலுத்த வேண்டும் என்று பிரதிவாதியிடம் தெரிவித்தேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி என்னுடன் பணியாற்றும் ஒரு பெண் ஊழியர் மற்றும் நர்ஸ் என்பதை மறந்து ரூபாய் 18 லட்சம் தராவிட்டால் அடாவடித்தனமாக வசூல் செய்வேன் என்று அவரிடம் தெரிவித்தேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி என்னிடம் வாங்கிய பணத்திற்கு ஒவ்வொரு மாதமும் ஓமந்தூரார் மருத்துவமனை வளாகத்தில் உள்ள கனரா வங்கி கிளை மூலமாக வட்டி தொகை திருப்பி செலுத்தி வந்தார் என்றால் சரியல்ல. பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரை பத்தி 16 ல் குறிப்பிட்டவாறு

ரூ.2,25,000/-வட்டிக்காக என்னிடம் திருப்பி செலுத்தி இருக்கிறார் என்றால் தவறாகும். பிரதிவாதி என்னிடம் வாங்கிய கடனுக்காக மொத்தமாக ரூ.7,51,000/- திருப்பிச் செலுத்தி இருக்கிறார் என்றால் தவறாகும். 11.03.2022 அன்று சுமங்கலி பைனான்ஸ்க்கு செலுத்த வேண்டிய தொகை தவிர எனக்கு செலுத்த வேண்டிய தொகை விவரங்களை குறிப்பிட்டு வாட்ஸ்அப் மூலம் தகவல் அனுப்பி இருந்தார் என்றால் தவறாகும். அந்த வாட்ஸ்அப் தகவலுக்கு நான் 1867 என்று குறிப்பிட்டு இருந்தேன் என்றால் தவறாகும். அதற்கான அர்த்தம் ரூ.18,67,000/- என்றால் சரியல்ல. நான் பிரதிவாதிக்கு கொடுத்த பணத்தை என்னுடைய வீட்டில் வைத்து தான் கொடுத்தேன். தாவா பிராமிசரி நோட்டை யார் எழுதினார்கள் என்றால், பிரதிவாதி வரும்போது அதை எழுதி நிரப்பி கொண்டு வந்திருந்தார். தாவா பிராமிசரி நோட்டில் பிரதிவாதி அழைத்து வந்திருந்த காளிமுத்து என்ற நபர் கையொப்பம் செய்திருந்தார். அந்த காளிமுத்து என்ற நபரை எனக்கு தெரியாது. பிரதிவாதி தான் அந்த நபரை அழைத்து வந்திருந்தார். என்னுடன் பிரபு என்ற ஒரு நபரும் வேலை பார்க்கிறார். அவர் நான் பணியாற்றும் மருத்துவமனையில் கிளார்க்காக வேலை பார்க்கிறார். அவருக்கும் நான் பணம் கொடுத்து இருக்கிறேன். அவருக்கும் எனக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் உண்டு. நான் அவருக்கும் ரூபாய் பத்து லட்சம் கொடுத்து இருக்கிறேன். ஆனால் அது கைமாற்று பணமாகும். வட்டிக்கு கொடுக்கவில்லை. அதற்கு நான் அவரிடம் வட்டி பணம் எதுவும் வாங்கவில்லை. நான் அந்த பணத்திற்கு அவரிடம் ஆவணம் எதுவும் எழுதி வாங்கவில்லை. அவர் ஒரு காசோலை மட்டும் என்னிடம் கொடுத்து இருக்கிறார். அந்த காசோலை பூர்த்தி செய்து கொடுத்து இருக்கிறார். அது தொடர்பாக துறையூர் நீதிமன்றத்தில் நான் ஒரு வழக்கு தாக்கல் செய்து இருக்கிறேன் என்றால் சரிதான். நான் காசோலை மோசடி வழக்கை பிரபு மீது தாக்கல் செய்த பிறகு என் மீது கந்துவட்டி புகார்

VerdictumIn

தனியாக கொடுத்து இருந்தார். நான் காளிமுத்து என்ற நபரை வைத்து பிரபு மீது அசல் வழக்கு எண்.156/2023 என ஒரு வழக்கை முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் தாக்கல் செய்து நிலுவையில் இருந்து வருகிறது என்று சொன்னால் சரியல்ல. எனக்கு இருபது லட்சம் ரூபாய் வரை கொடுப்பதற்கு வசதி இருக்கிறதா என்றால், கூட்டுக் குடும்பமாக வசித்து வருகிறோம். நாங்கள் சேமித்து வைத்திருந்த பணத்தை சொத்து வாங்குவதற்காக வைத்திருந்தேன். அதைத்தான் கடனுக்கு கொடுத்தேன். நான் வருமான வரி செலுத்தவில்லை. கடந்த 31.03.2018 அன்று பிரதிவாதி சுமங்கலி பைனான்ஸ் நிறுவனத்தில் கடன் வாங்கிய போது கொடுத்த புரோநோட்டை வைத்து நான் இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. 2018 ஆம் வருடம் எழுதிக் கொடுக்கப்பட்ட புரோநோட்டை வைத்து 2023 ஆம் வருடம் வழக்கை தாக்கல் செய்திருப்பதால் வழக்கு காலாவதி குறைபாட்டிற்கு உள்ளாகிறது என்றால் சரியல்ல. நான் அதிகப்படியான வட்டி வசூல் செய்து வரும் நபர் என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்த வழக்கிற்கு எவ்வித முகாந்திரமும் இல்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை:-**</u> இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.